**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 157/2018**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | நல்லு | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 19.02.2026

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம், பெரியகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 09.12.2016 வருடம் அவணியாபுரம் காவல்நிலைய குற்ற எண்.2398/16, ச/பி.8(c) r/w 20(b)(ii)(B)NDPS வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் அழகுமுத்து எனது பார்வைக்கு வைத்தார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்டு வழக்கின் சம்பவ இடமான வில்லாபுரம், வெற்றிதியேட்டர் பின்புறம் கால்வாய் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டும், வழக்கின் சாட்சிகளான தலைமைக்காவலர்-கண்ணன்,முதல்நிலை காவலர்-ரமேஷ், சார்பு ஆய்வாளர்- அழகுமுத்து ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களான 100கிராம் மாதிரிக்கு எடுக்கப்பட்ட பூ, இலை தண்டுகளுடன் கூடிய கஞ்சாவையும், மீதமுள்ள 1150கிராம் எடையுள்ள பூ, இலை தண்டுகளுடன் கூடிய கஞ்சாவை படிவம்-91 மூலம் கைப்பற்றி இந்த வழக்கின் எதிரியான ராமகிருஷ்ணன் மற்றும் வழகது சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். 18.05.2017ம் தேதி இந்த வழகது சொத்துக்களுக்கு RPR No.197/17ன் படி பெற்று 25.07.2017ம் தேதி பகுப்பாய்வுக்கு அனுப்பும்பொருட்டு வேண்டுகோள் கடிதம் கொடுத்து 23.05.2017ம் தேதி பகுப்பாய்வு அறிக்கை பெற்று பகுப்பாய்வினர்

ராமச்சந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 8(c) r/w 20(b)(ii)(B)NDPS ACT ன் படி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தான மீதம் உள்ள கஞ்சாவை தற்போதைய அவணியாபுரம் காவல் ஆய்வாளர் அவர்களால் பிரிவு 52(ஏ) NDPS ACT ன் கீழ் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க நீதித்துறை நடுவர் நீதிமன்றம் III மூலமாக இந்த வழகக்கு சொத்து அழிக்கப்பட்டுள்ளது. படிவம் -91 **அ.சா.ஆ.4** ஆகும். கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்வு செய்யக்கோரி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்திற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.5** ஆகும். வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வு செய்ய நீதிமன்றம் அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.6** ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். மீதம் உள்ள கஞ்சாவை பிரிவு 52(ஏ)NDPS ACT ன் படி மதுரை நீதித்துறை நடுவர் எண்.III அவர்களுக்கு விசாரணை நீதிமன்றத்தால் உரிய முறைப்படி அழிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவு **அ.சா.ஆ.8** ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா **சா.பொ.1** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.